பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 17 செவ்வாய்க்கிழமை 02.08.2022 கதிர் 159

அரச அலுவலகங்களுக்கு

## வெள்ளி விடுமுறை இனிமேல் இல்லை!

அரச அலுவலகங்களை வெள்ளிக்கிழமைகளில் மூடுவது தொடர்பில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் இன்றைய செய்தியாளர் சந்திப்பில்

☞2

# ஆதரவு வழங்காமல் பங்காளியாகுங்கள்





மீண்டும் அமைச்சரான நிமல் கூட்டமைப்பினருக்கு அழைப்பு

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமையவுள்ள சர்வகட்சி அரசுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியில் இருந்து ஆதரவு மாத்திரம் வழங்காமல் அதில் பங்காளியாக இணைய வேண்டும்.**

**– இவ்வாறு அழைப்பு விடுத்தார் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.**

☞2

## வெளிநாட்டைப் பகைக்கவேண்டிய தேவை இலங்கைக்குக் கிடையாது!

ஜனாதிபதி ரணில் கருத்து



எந்த நாட்டையும் பகைக்க வேண்டிய, மோத வேண்டிய தேவை இலங்கைக்குக் கிடையாது.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

☞2

## கோட்டா இலங்கைக்கு வந்தால் அரசுதான் பாதுகாக்கவேண்டும்

'மொட்டு'க் கட்சி கூறுகின்றது



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பினால் அவரை அரசுதான் பாதுகாக்க வேண்டும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

'முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,

☞2

## கோட்டாவுக்குச் சலுகை எதுவும் வழங்கவில்லை

மீண்டும் உறுதிப்படுத்தியது சிங்கப்பூர்



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சிங்கப்பூர் அரசு, எந்தச் சலுகையும், விருந்தோம்பலும் அளிக்கவில்லை என்று சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் சிங்கப்பூர் வருகை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ஜெரால்ட் கியாமின் கேள்விக்கு பாலகிருஷ்ணன் எழுத்துபூர்வமாக

☞2





## நல்லூர் கந்தன் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பம்

(ந.லோகதயாளன்)

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத் திருவிழா இன்று காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இன்று காலை 9 மணி முதல் பூர்வாங்கக் கிரியைகள்

☞2

## ஜனாதிபதி நாளை கொள்கை விளக்கம்

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் 3 ஆவது கூட்டத் தொடர் நாளை முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்கவால் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பித்து வைக்கப்படும்.

நாளை ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மாத்திரமே

☞2

## பொலிஸ் கோரிக்கையை நிராகரித்தது நீதிமன்றம்

முன்னிலை சோசலிசக் கட்சியால் கொழும்பு கோட்டை பொலிஸ் பிரிவில் இன்று மாலை நடத்தப்படுகின்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்குத் தடைவிதிக்குமாறு பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கொழும்பு கோட்டை

☞2

## 24 மணிநேரமும் ஒட்டுக்கேட்கப்படுகின்றது எனது கைத்தொலைபேசியின் உரையாடல்



உயிரைப் பணயம் வைத்தே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டேன் என்கிறார் தோல்வியடைந்த டலஸ்

எனது கைத்தொலைபேசி உரையாடல் 24 மணிநேரமும் ஒட்டுக்கேட்கப்படுகின்றது. இதற்கு யார் உத்தரவிட்டார்கள் என்பதை இனி வரும் காலங்களில் வெளிப்படுத்துவேன்.

– இவ்வாறு நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வியடைந்த ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மாத்தறை மாவட்ட எம்.பி.

☞2

## கைதாவதைத் தடுக்கக்கோரி அருட்தந்தை மனுத் தாக்கல்!




காலிமுகத்திடல் போராட்டத்தின் செயற்பாட்டாளரான அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் உயர்நீதிமன்றத்தில் இன்று அடிப்படை உரிமைகள் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தான் பொலிஸாரால் கைதுசெய்யப்படுவதைத் தடுப்பதற்கு, இடைக்காலத் தடை உத்தரவு

☞2

## எங்கள் குரலை அடக்க முடியாது

கைதாகுவதற்கு முன் 'ரெட்டா' தெரிவிப்பு



விசாரணை என்ற பெயரில் எங்களை அழைத்து அச்சுறுத்துவதன் மூலமோ அல்லது எங்களைக் கைதுசெய்து சித்திரவதை செய்துவிட்டு விடுவிப்பதன் மூலமோ அல்லது எங்களைக் கைதுசெய்துசிறையில் தொடர்ந்து அடைத்துவைப்பதன் மூலமோ அரசுக்கு எதிரான

☞2


## ரணிலின் இல்லத்துக்கு தீ வைத்த மூவர் கைது!

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் உள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்துக்குத் தீ வைத்த சம்பவத்தில் பிரதான சந்தேகநபர் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தினர் நேற்றிரவு பிலியந்தலை மற்றும் நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் வைத்து இவர்களைக் கைதுசெய்தனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

மடபாத்த மற்றும் கொழும்பு – 05 பிரதேசங்களைச் சேர்ந்த 18 – 22 வயதுக்கு இடைப்பட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

☞2



## வாள்களுடன் வந்த மூவரில் ஒருவர் வசமாக மாட்டினார்!

மோட்டார் சைக்கிளும் சிக்கியது

யாழ். வட்டுக்கோட்டையில் திருட்டு, கொள்ளை மற்றும் வழிப்பறி அதிகரித்துள்ள நிலையில் மக்களை அச்சுறுத்தும் வகையில் வாள்களுடன் நடமாடிய மூவரில் ஒருவர் ஊர் இளைஞர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

☞2

## கைதாவதைத் தடுக்கக்கோரி ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிறப்பிக்கக் கோரி அவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரும் அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் உள்ளிட்டோருக்கு எதிரான அடக்குமுறைக்கு எதிராக 1,640 அருட்தந்தை மற்றும் அருட்சகோதரிகள் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

கத்தோலிக்கமதகுருமார்கள்கையொப்பமிட்ட இந்தக் கூட்டறிக்கையில், அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் உள்ளிட்டோரைக் கைதுசெய்வதற்கான முயற்சிகள் குறித்து ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின், அருட்தந்தை ஜீவந்த பீரிஸ், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, 'மாற்றத்துக்கான இளைஞர்கள்' அமைப்பின் தேசிய அமைப்பாளர் லஹிரு வீரசேகர மற்றும் எரங்க குணசேகர உள்ளிட்ட 6 பேர் வெளிநாடு செல்வதைத் தடுக்கும் வகையில் கோட்டை நீதிவான் நீதிமன்றம் கடந்த 25 ஆம் திகதி தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

பொலிஸ் தலைமையகத்துக்கு முன்பாகச் சட்டவிரோதமாகப் பொதுமக்களை ஒன்றுகூட்டி, அரச சொத்துக்களுக்குச் சேதம்விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டு மனு தொடர்பிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

## எங்கள் குரலை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எங்களின் குரலை அடக்க முடியாது.

– இவ்வாறு காலிமுகத்திடல் போராட்டக் குழுவைச் சேர்ந்த சமூக ஊடகச் செயற்பாட்டாளர் 'ரெட்டா' என்றழைக்கப்படும் ரதிந்து சேனாரத்ன தெரிவித்தார்.

விசாரணை ஒன்றுக்காக கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு நேற்றுக் காலை அழைக்கப்பட்டிருந்த 'ரெட்டா', நேற்று மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார். விசாரணைக்குச் செல்வதற்கு முன்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்றுக் காலை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு சென்றிருந்த இவரிடம் நீண்ட நேரம் விசாரணை நடத்தப்பட்டது. அதன் பின்னரே இவர் கைதுசெய்யப்பட்டார்.

ஏற்கனவே கடந்த மே மாதத்தில் கொழும்பு – கோட்டை நீதிமன்றத்துக்கு முன்னால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டிருந்த இவர் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரணிலின் இல்லத்துக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஜூலை 9ஆம் திகதி நடைபெற்ற போராட்டத்தின்போது இந்தத் தீ வைப்பு இடம்பெற்றுள்ளது.

இதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீடு பாரியளவில் சேதமடைந்துள்ளதுடன், அவரது தனிப்பட்ட நூலகமும் எரிந்து நாசமாகியுள்ளது என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## வாள்களுடன் வந்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கரத்தைச் சந்தியில் நேற்றிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வட்டுக்கோட்டை தெற்கு மற்றும் மூளாய் பகுதிகளைச் சேர்ந்த மூவரே இவ்வாறு வாள்களுடன் நடமாடியுள்ளனர்.

அதனை அவதானித்த வட்டுக்கோட்டை இளைஞர்களில் ஒருவர் சந்தேகம் கொண்டு வழிமறிக்க முற்பட்டவேளை மூவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி வீதியில் அவர்கள் வீழ்ந்துள்ளனர்.

அவர்களில் இருவர் வாள்கள் இரண்டைக்கைவிட்டுத் தப்பித்த நிலையில் ஒருவர் காயங்களுடன் சிக்கிக்கொண்டார்.

வாள்களுடன் சிக்கிக்கொண்ட மூளாயைச் சேர்ந்தவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இரண்டு வாள்களையும், மோட்டார் சைக்கிளையும் அங்கிருந்து பொலிஸார் எடுத்துச் சென்றனர்.

## கோட்டாவுக்குச் சலுகை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பதிலை வழங்கியுள்ளார்.

பொதுவாக, சிங்கப்பூர் அரசு முன்னாள் அரச தலைவர்கள் அல்லது தலைவர்களுக்கு சலுகைகள் மற்றும் விருந்தோம்பல் ஆகியவற்றை வழங்குவதில்லை.

இதன் அடிப்படையில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் எந்தவித சலுகைகளோ, விருந்தோம்பலோ வழங்கப்படவில்லை – என்று சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ, தனிப்பட்ட பயணமாக கடந்த ஜூலை 14ஆம் திகதி சிங்கப்பூர் வந்தடைந்தார் என்று சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சு முன்னர் கூறியது.

தனது குறுகிய கால வருகை விசாவை நீடித்த நிலையில் அவர் ஆகஸ்ட் 11ஆம் திகதி சிங்கப்பூரில் தங்க அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கோட்டா இலங்கைக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு திரும்புவதற்குப் பொருத்தமான நேரம் இதுவல்ல. அவர் இந்த நேரத்தில் நாட்டுக்கு வந்தால் அரசியல் ரீதியிலான பிரச்சினைகள் ஏற்படலாம்' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார். இந்நிலையிலே, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளரின் மேற்படி கருத்து வெளியாகியுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைப் பிரஜை. இங்கு வருவதற்கான உரிமை அவருக்கு உள்ளது. முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் அவருக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. எனவே, அவர் நாடு திரும்பினால் அவரை அரசுதான் பாதுகாக்க வேண்டும் – என்றார்.

## வெளிநாட்டைப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவருக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு நாட்டின் வெளிவிவகாரம் சம்பந்தமாக அந்த நாட்டு அரசே தீர்மானம் எடுக்கும். அதில் வெளிச்சக்திகள் தலையிட முடியாது. நாட்டின் பாதுகாப்பு சம்பந்தமாக தீர்மானம் எடுக்கும்போது அரசும், பாதுகாப்புத் தரப்பினரும் இணைந்து முடிவெடுப்பார்கள். அதன் பிரகாரம், அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குச் சீனக் கப்பல் வருவதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியிருக்கின்றது.

இந்த விடயத்தை உள்ளக சக்திகளும், வெளியகச் சக்திகளும் சுயநல அரசியலுக்கும், தத்தமது பலங்களை நிரூபிப்பதற்கும் பயன்படுத்த முயல்கின்றார்கள். எந்த நாட்டையும் பகைக்க வேண்டிய, மோத வேண்டிய தேவை இலங்கைக்குக் கிடையாது. வரலாறு காணாத பொருளாதார அடியால் வீழ்ந்து கிடக்கின்றது இலங்கை. அதிலிருந்து மெல்ல மெல்ல இலங்கை இப்போதுதான் எழுகின்றது.

இந்தநிலையில், வெளிநாடுகளின் ஒத்துழைப்பையே கோரி நிற்கின்றோம். பகைமைகளை மறந்து ஒவ்வொரு நாடுகளும் இலங்கைக்கு உதவ வேண்டும் என்பதுதான் எங்களின் கோரிக்கையாக இருக்கின்றது.

சீனக் கப்பல் விவகாரம் தொடர்பில் உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வெளியாகும் முரண்பாடான செய்திகள் எமக்கு மிகவும் மனவருத்தத்தைத் தருகின்றது – என்றார்.

## 24 மணிநேரமும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

'தெரண' தொலைக்காட்சியில் ஒளிபரப்பான '360' அரசியல் நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது, ரணில் விக்கிரமசிங்கவைத் தனிப்பட்ட ரீதியில் அவமானப்படுத்தும் விதத்தில் 'போஸ்டர்கள்' வடிவமைக்கப்பட்டிருந்தன. முதலாவது போஸ்டர் 'மைக்கல் ஜெக்சன்' போல் ஆடை அணிவிக்கப்பட்டு, 2 ஆவது போஸ்டரில் பராக்கிரமபாகு மன்னரின் படத்துக்கு ரணிலின் தலை பொருத்தப்பட்டது.

தேர்தல் பிரசார நடவடிக்கையை நான் பொறுப்பேற்றபோது, இந்தப் போஸ்டர்களை நிராகரித்தேன். ரணில் விக்கிரமசிங்கவைத் தனிப்பட்ட ரீதியில் அவமதிக்கும் வகையிலான 40 ஆயிரம் போஸ்டர்களை எரிக்க நடவடிக்கை எடுத்தேன். இது மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தெரியும்.

1994 முதல் 2019 வரை ரணில் விக்கிரமசிங்கதான் எமது அணியின் அரசியல் எதிரி. ஆனால், நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பின்போது அவரை ஆதரிப்பதற்கு மொட்டுக் கட்சி முடிவெடுத்தது. அது தொடர்பில் அதிகாரபூர்வமாக அறிக்கையும் வெளியிடப்பட்டிருந்தது.

எனது அரசியல் வாழ்வில் ரணில் விக்கிரமசிங்கவை நான் தனிப்பட்ட ரீதியில் தாக்கிப் பேசியது கிடையாது. மத்திய வங்கிக் கொள்ளை, பட்டலந்த விவகாரம் பற்றி விமர்சித்ததும் கிடையாது. இது ரணிலுக்கும் தெரியும்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதித் தேர்வில் வெற்றி பெறுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தைக்கூட விஞ்சும் விதத்தில் நகர்வுகள் (பணப் பறிமாற்றம்) முன்னெடுக்கப்பட்டன. அவை என்றாவது வெளிச்சத்துக்கு வரும். டலஸ் அழகப்பெருமவுக்கு எதிராக ஜயவர்தன மற்றும் ராஜபக்ஷ குடும்பம் ஒன்றிணைந்தது.

நாட்டில் பிரபுத்துவம் அற்ற அரசியலுக்காக முன் நின்றவர்கள்தான் விஜேகுமாரதுங்க, ரோஹன விஜேவீர, ரணசிங்க பிரேமதாஸ, வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆகியோர். இறுதியில் என்ன நடந்தது? நால்வரும் கொலை செய்யப்பட்டனர். இவர்களின் அரசியல் நிலைப்பாடுகளை நான் நியாயப்படுத்த முற்படவில்லை.

பிரபுத்துவ அரசியலை எதிர்ப்பது எவ்வளவு பெரிய சவால் என்பதைப் புரிந்து கொண்டேன். எனது உயிரைப் பணயம் வைத்துத்தான் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சவாலை ஏற்றேன் – என்றார்.

## நல்லூர் கந்தன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமாகி, காலை 10 மணிக்கு அந்தணசிவாச்சாரியர்களின் வேத மந்திரங்கள் இசைக்க, தவில் நாதஸ்வரம் ஒலிக்க, பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் கொடியேற்றம் இடம்பெற்றது.

தொடர்ந்து 25 நாட்கள் மகோற்சவ திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 11ஆம் திகதி திருமஞ்சத் திருவிழாவும், 19ஆம் திகதி திருக்கார்த்திகைத் திருவிழாவும் உற்சவமும், 23ஆம் திகதி காலை மாம்பழத் திருவிழாவும், 24ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 25ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 26 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று அன்றைய தினம் மாலை கொடியிறக்கம் இடம்பெறவுள்ளது.

## பொலிஸ் கோரிக்கையை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிவான் திலின கமகே குறித்த கோரிக்கையை நிராகரித்துள்ளார்.

ஆர்ப்பாட்டத்தைத் தடுத்து உத்தரவிட நீதிமன்றத்துக்கு இயலுமை இல்லை என்று நீதிவான் அறிவித்துள்ளார்.

அமைதியைச் சீர்குலைக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுமாயின், பொலிஸாருக்குள்ள அதிகாரங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்குமாறு கோட்டை நீதிவான் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

## ஜனாதிபதி நாளை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறும்.

தனது கொள்கை விளக்க உரையில் சர்வகட்சி அரசுக்கான அழைப்பை ஜனாதிபதி வெளியிடுவார். பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களும் உள்ளடக்கப்படும்.

## ஆதரவு வழங்காமல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட நிமல் சிறிபால டி சில்வா, சர்வகட்சி அரசு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதாரம், அரசியல் என அனைத்துத் தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண சர்வகட்சி அரசு நிறுவப்பட வேண்டும் எனவும், அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு ஆதரவு வழங்கும் என்றும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ள கருத்து அனைவராலும் வரவேற்கத்தக்கது.

ஆனால், ஜனாதிபதி தலைமையில் அமையவுள்ள சர்வகட்சி அரசுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியில் இருந்து ஆதரவு மாத்திரம் வழங்காமல் அதில் பங்காளியாக இணைய வேண்டும். அப்போதுதான் தீர்வுக்காகக் காத்திருக்கும் மக்களுக்குச் சேவையாற்ற முடியும் – என்றார்.

இதேவேளை, சர்வகட்சி அரசில் இணைவது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சி ரீதியான முடிவு விரைவில் எடுக்கப்படும் என்று அதன் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சர்வகட்சி அரசு ஒரு வழிமுறையாகும். அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவு வழங்கத் தயாராக இருக்கின்றது. ஆனால், எந்த வகையிலான ஆதரவை அல்லது பங்களிப்பை வழங்குவது என்பது கட்சியாகவே தீர்மானிக்கப்படும் – என்றார்.

## வெள்ளி விடுமுறை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அண்மைய நாள்களில் நிலவிய போக்குவரத்து நெருக்கடி காரணமாக வெள்ளிக்கிழமையை அரச அலுவலகங்களுக்கான விடுமுறை தினமாக அறிவித்து பொது நிர்வாக அமைச்சால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

எனினும், தற்போது, பொதுப்போக்குவரத்துப் படிப்படியாக வழமைக்குத் திரும்பி வருகின்றது.

போக்குவரத்திலிருந்து விலகியிருந்த 800 பஸ்களை இலங்கை போக்குவரத்துச் சபை மீளச் சேவையில் இணைத்துள்ளது.

அத்துடன், வெற்றிகரமான முறையில் கியூ.ஆர். முறைமையின் கீழ் எரிபொருள் வழங்கப்படுகின்றது.

எனவே, இந்த விடயங்களைக் கருத்தில்கொண்டு, பொது நிர்வாக அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை இரத்துச் செய்யுமாறு, பொது நிர்வாக அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் வாரம் முதல் வெள்ளிக்கிழமைகளில் அரச அலுவலகங்கள் வழமை போல் இயங்கும் – என்றார்.

- விளம்பர தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அர்த்தமற்ற அபத்த போக்கு

**ஒரு நெருக்கடியில் இருந்து – பிரச்சினையிலிருந்து – மீளுவதாயின் அந்த நெருக்கடியின் அல்லது பிரச்சினையின் ஆழத்தை புரிந்து கொள்வது மிக அவசியம்.**

**அதனைப் புரிந்து கொள்ளாது பிதற்றுவது பயன் தரப்போவதில்லை. தீர்வை நோக்கி வழிகாட்டப் போவதும் இல்லை.**

**நாடு இப்போது எதிர்கொண்டிருக்கும் அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகளில் இருந்து மீளுவதாயின் அந்த அரசியல், பொருளாதார, சமூக நெருக்குவாரங்களின் ஆழ அகலங்களை புரிந்து கொள்வது அவசியம். மிக மிக அவசியம்.**

**இந்த அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகளின் விளைவுகளை – பெறுபேறுகளை – எல்லோருமே எதிர்கொள்கின்றோம். அந்த விளைவுகள் அல்லது பெறுபேறுகள்தான் நெருக்கடிகளின் காரணிகள் அல்ல.**

**நோயின் குணங்குறியைத்தான் நாம் எதிர் கொள்கின்றோம். நோயின் மூலம் யாது என்பதை குணங்குறிகள் தாமாக வெளிப்படுத்தி விடுவதில்லை. தேடிப் பகுத்தாய்ந்து நுணுகி நோக்கித்தான் அதனைக் கண்டறிய வேண்டும்.**

**நாம் எதிர்நோக்கும் இப்போதைய அரசியல், பொருளாதார, சமூகக் கட்டமைப்பு ரீதியான நெருக்கடிகளும் பின்னடைவுகளும் கூட இப்படித்தான்.**

**கண்மண் தெரியாத விலைவாசி உயர்வும், அத்தியாவசிய பொருள்களின் பற்றாக்குறை, தட்டுப்பாடு என்பனவும், அத்தியாவசிய சேவைகளில் பெரும் பாதிப்பு போன்றவையும் நாட்டை பிடித்துள்ள நோயின் குணங்குறிகள் மட்டுமே. நோய் – பிணி – அதுவல்ல.**

**கேட்டால் அந்நிய செலாவணிக் கையிருப்பின்மை பிரதான பி ரச்சினை என்பர். அதுவும் கூட குணங் குறிதான். மூல காரணி அல்ல.**

**நாடு பின்பற்றும் பொருளாதாரக் கொள்கைகள், பொது நடவடிக்கை அணுகுமுறைகள், அதிகார வர்க்கத்தின் தீர்மானங்கள் என்று இந்நிலைமைக்கு மூல காரணிகள் பல உண்டு. அதேசமயம் உலகப் பொருளாதார வீழ்ச்சி, உற்பத்திக் குறைவு, பற்றாக்குறை, யுத்தங்கள் என்ற இன்னோரன்ன வெளிப்புறக் காரணிகளும் கூட இந்நிலைமை ஏற்பட்டமையில் காத்திரமான பங்களிக்கின்றன என்பதை மறந்து விடக்கூடாது.**

**ஆக, இந்த நெருக்கடிகளுக்குத் தீர்வு ஒன்றை காண முயற்சிப்பதாயின், அந்நெருக்கடியின் ஆழ அகலத்தைப் புரிந்து கொண்டு, அதற்கான தீர்வு வரையறை வகுத்து, அதன்படி செயலாற்ற முனைவதே வழி.**

**ஆனால் நெருக்கடி என்ன என்பதைக் கண்டறிந்து முடிவு கட்டுவதிலேயே நாட்டை வழிகாட்டும் அரசியல் தலைமைகள் தெளிவாகவும், உருப்படியான தீர்க்க தரிசனப் பார்வை கொண்டவையாகவும் இல்லை என்பதுதான் விசனம் தரும் உண்மை.**

**யானை பார்த்த குருடர்கள் போல நமது அரசியல் தலைவர்கள் ஒவ்வொருவரும் தத்தம்மிஷ்டப்படி இந்த நடைமுறைப் பிரச்சினைகள் குறித்து வியாக்கியானம் கூறிக் கொண்டிருக்கின்றமை வியப்பைத் தருகின்றது.**

**இந்த நெருக்கடியை இலங்கையின் அரசியல் தரப்புகள் எல்லாம் ஒன்றுபட்டு அணுகி, கூட்டு ஏற்பாட்டின் மூலம் கையாண்டு தீர்ப்பதற்கான ஓர் எத்தனமாக சர்வகட்சி அரசு அமைப்பது குறித்து பிரஸ்தாபிக்கப்படுகின்றது. அதற்கான முயற்சி முளைவிட முன்னரே, குருடன் யானையைப் பார்த்த கதையாகக் கட்சிகளும் தலைவர்களும் வெளியிடும் கருத்துக்களைப் பார்த்தால், அவர்கள் மோசமான கட்டத்தில் விழுந்திருக்கும் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகளின் ஆழ, அகலத்தை – அடிப்படைகளை – புரிந்து கொள்ளவே இல்லை என்பது தெளிவாகிறது. இத்தகையோர் ஒன்று கூடி சர்வகட்சி அரசு மூலமோ அல்லது வேறு வழிகளிலோ நாட்டை மீட்கக் காத்திரமாக எதுவும் செய்வர் என்று நம்புவது அர்த்தமற்றது என்றே தோன்றுகின்றது.**

# சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆதரவு

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

தமிழ் முற்போக்கு கூட்டணி, தேர்தலை மாத்திரம் இலக்கு வைத்து செயற்படும் கூட்டணி கிடையாது. அது மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கும் கூட்டணியாகும். எனவே, தலைமைப்பதவியில் மனோ கணேசன் நீடிப்பார். ஒன்றிணைந்த எமது பயணம் தொடரும்.

– இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

சர்வகட்சி அரசமைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். நாட்டின் நலன்கருதி இதில் இணையுமாறு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். சர்வகட்சி அரசையே நாடும், சர்வதேசமும் கூட எதிர்பார்க்கின்றது. நாமும் அதனை வரவேற்கின்றோம்.

சர்வகட்சி அரசு சம்பந்தமாக மலையக மக்கள் முன்னணி சாதகமான நிலைப்பாட்டில் இருந்தாலும், தமிழ் முற்போக்கு கூட்டணியாக எடுக்கப்படும் முடிவே அறிவிக்கப்படும்.

தமிழ் முற்போக்கு கூட்டணி எதிர்வரும் 03 ஆம் திகதி கூடவுள்ளது. அதன்பின்னரே சர்வகட்சி அரசில் இணைவதா அல்லது எமது வகிபாகம் எவ்வாறு அமையும் என்பது குறித்து அறிவிக்கப்படும்.

தமிழ் முற்போக்கு கூட்டணி என்பது தேர்தலுக்காக முளைத்த கூட்டணி அல்ல. அது மக்களுக்கான – கொள்கை அடிப்படையிலான கூட்டணி. எமது கூட்டணிக்குள் எவ்வித பிளவும் இல்லை. ஓரணியில் எமது பயணம் தொடரும். கூட்டணியின் தலைமைப்பதவியில் நீடிக்குமாறு மனோ கணேசனிடம் நாம் கேட்டுக்கொண்டுள்ளோம். எமது மக்களுக்கான வேலைத்திட்டத்தை கூட்டாக முன்னெடுப்பதே சிறந்ததாக அமையும்.

சர்வகட்சி அரசு சம்பந்தமாகவே தற்போது பேசப்படுகின்றது. மாறாக அமைச்சுப் பதவி பற்றி பேசப்படவில்லை. உரிய நேரத்தில் அதற்கான கலந்துரையாடல் இடம்பெறும்.

– என்றார்.

# வங்குரோத்து நிலையில் உள்ள இலங்கை சிறுவர்களுக்கு உணவளிக்க உதவி கோரல்

இலங்கையில் சிறுவர்கள் மத்தியில் வேகமாக அதிகரித்து வரும் மந்தபோசாக்கை எதிர்கொள்வதற்கான அவசர உதவியை இலங்கை கோரியுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக பத்தில் ஒருவர் அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்த்திருக்கும் நிலை உருவாகிவரும் நிலையிலேயே இலங்கை இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

போதிய உணவின்றி அவலத்தில் சிக்குண்டுள்ள ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு உணவளிப்பதற்காக தனியாரிடமிருந்து உதவியைக் கோருவதாக மகளிர் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் மோசமான பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள வங்குரோத்து நிலையில் உள்ள அரசாங்கம் நலன்புரித் திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

கொவிட் பெருந்தொற்று உச்சத்தில் காணப்பட்டவேளை நிலைமை மோசமாகவிருந்தது தற்போது பொருளாதார நெருக்கடி காரணமாக மிகமோசமானதாக மாறியுள்ளது என அமைச்சின் செயலாளர் நெய்ல் பண்டார ஹப்புகின்னே செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

2021 இல் ஐந்து வயதிற்கு உட்பட்ட 5 லட்சத்து 70 ஆயிரம் சிறுவர்கள் மத்தியில் மந்தபோசணையால் பாதிக்கப்பட்ட ஒரு லட்சத்து 27 ஆயிரம் சிறுவர்கள் இருப்பதை மதிப்பிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் பணவீக்கத்தின் முழுமையான தாக்கம் மற்றும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கான பற்றாக்குறை காரணமாக இந்த எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்திருக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திடமிருந்து நேரடி உதவி பெறுபவர்களின் எண்ணிக்கை கடந்த வருடம் இரண்டுமடங்காகியுள்ளது. சனத்தொகையில் 90 வீதமானவர்கள் அரசாங்கத்தையே உணவிற்காக நம்பியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பத்து நாள்களில் 24 ஆயிரம் பேர் காட்டுப்பாதை ஊடாகப் பயணம்!



(காரைதீவு நிருபர் சகா)

கதிர்காமத்திற்கான காட்டுப்பாதையில் கடந்த 10 நாள்களில் 24 ஆயிரம் பேர் பயணித்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அந்தப்பிரதேசத்திற்கு பொறுப்பான, லாகுகலை பிரதேச செயலாளர் எஸ்.நவநீத ராஜாவிடம் கேட்டபோது –

கடந்த 31ஆம் திகதி வரை 22 ஆயிரத்து 500 பேர் காட்டுக்குள் பயணம் செய்தனர் என இராணுவத்தினரின் பதிவுகளில் இருந்து தெரிய வருகிறது என்றும், நேற்று முதலாம் திகதி ஆயிரத்து ஐந்நூறு பேர் அளவிலே காலையிலும் மாலையிலும் காட்டுக்குள் பிரவேசித்தனர் எனக் கூறப்படுகின்றது– என்று தெரிவித்தார். அதேபோல, உகந்தை முருகன் ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க தெரிவிக்கையில் – இதுவரை காலமும் இல்லாத அளவிலே இம்முறை அதிக எண்ணிக்கையான அடியார்கள் காட்டுப் பாதையில் பயணித்து இருக்கின்றார்கள். கொடியேற்ற தினத்தன்று அதிகமானோர் அதாவது 8 ஆயிரம் அடியார்கள் பயணித்திருக்கின்றமை இதுவே முதல் தடவை ஆகும்.– என்றார். இது இவ்வாறு இருக்க, காட்டுக்குள் தொடர்ச்சியாக மழை பொழிந்து வருவதால் பாதயாத்திரிகர்கள் சிரமப்பட்டு காட்டைக் கடந்து கதிர்காமத்தை அடைய வேண்டி இருப்பதாகக் கூறப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தாய்வானுக்குள் கால் வைத்தால் நடப்பதே வேறு
# நான்சி பெலோசிக்கு சீனா கடும் எச்சரிக்கை



அமெரிக்காவின் பிரதிநிகள் சபை சபாநாயகர் நான்சி பெலோசி சீனாவின் கடும் எதிர்ப்பையும் மீறி இன்று தாய்வானுக்கு செல்ல இருக்கிறார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆசிய நாடுகளான மலேசியா, ஜப்பான், தென்கொரியா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளுக்கு அமெரிக்காவின் பிரதிநிகள் சபை சபாநாயகர் நான்சி பெலோசி சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். தான் தாய்வானுக்கும் செல்லப்போகிறேன் என அவர் அறிவித்திருந்தார். இதற்கு சீனா கடும் எதிர்ப்பினை தெரிவிப்பதோடு, தாய்வானுக்குள் நான்சி பெலோசி கால் வைத்தால் சும்மா இருக்கமாட்டோம் என்றும் எச்சரிக்கை விடுத்தது. சீனாவில் ஏற்பட்ட உள்நாட்டு போருக்கு பின்னர் 1997ம் ஆண்டு முதல் தாய்வான் தன்னாட்சி பிரதேசமாக இயங்கி வருகிறது.

ஆனால், தாய்வானை சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. இந்த நிலையில், தாய்வானில் சீனா நடத்திய மனித உரிமை மீறல்கள் குறித்து கேட்டறிய அங்கு நான்சி பெலோசி இன்று செல்லலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நேற்று சிங்கப்பூரில் இருந்த நான்சி பெலோசி இன்று எந்த நாட்டுக்கு செல்ல உள்ளார் என்பது குறித்து தெளிவுபடுத்தப்படவில்லை. சீனாவின் எதிர்ப்பையும் மீறி தாய்வானுக்கு நான்சி பெலோசி சென்றால் அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே நேரடி மோதல் வெடிக்கும் என்றும் அஞ்சப்படுகிறது.

## ஆசிய பயணத்தின் முதல் கட்டமாக சிங்கப்பூர் சென்றார் நான்சி பெலோசி



அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி தனது ஆசிய சுற்றுப்பயணத்தின் முதல் கட்டமாக சிங்கப்பூர் சென்றடைந்தார். அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி தனது ஆசிய பயணத்தின் போது தாய்வானுக்கு செல்லவுள்ளேன் என அறிவித்தார். தாய்வானுக்கு உரிமை கொண்டாடும் சீனா இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இதனிடையே, சபாநாயகர் பெலோசி தனது ஆசிய பயணத்தை நேற்று முன்தினம் உறுதி செய்தார். அதன்படி, அவர் தனது குழுவினருடன் நேற்று அதிகாலை சிங்கப்பூர் சென்றார்.

"இந்த 2 நாள் பயணத்தில், பெலோசி, சிங்கப்பூர் அதிபர் ஹலிமா யாக்கோப், பிரதமர் லீ சியன் லுங், பல்வேறு துறைகளின் அமைச்சர்களை சந்தித்து ஆலோசனை நடத்த உள்ளார்," என்று சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். அமெரிக்க அரசின் முக்கிய பொறுப்பில் உள்ள பெலோசி, உலக அரங்கில் அமெரிக்காவின் தூதுவராக தன்னை நிலைநிறுத்தி கொள்ள தாய்வான் விஜயம் ஒரு படிக்கல்லாக அமையும் என்பதால் அவரது தாய்வான் பயணம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. அதே நேரம், 'பெலோசி தாய்வான் சென்றால், சீன ராணுவம் வேடிக்கை பார்த்து கொண்டு சும்மா இருக்காது,' என்று சீன வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



## பாகிஸ்தானில் கனமழை
# மீட்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஹெலிக்கொப்டர் திடீரென மாயமானது

பலுசிஸ்தானில் மூத்த அதிகாரிகளை ஏற்றிச் சென்ற பாகிஸ்தான் ராணுவ ஹெலிகொப்டர் மாயமாகி உள்ள நிலையில், அதனை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. பாகிஸ்தான் நாட்டில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் கனமழையால் பல இடங்களில் மழை நீர் சூழ்ந்துள்ளது. இதனால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதாவது, பலுசிஸ்தான், சிந்து, கில்கிட்–பால்டிஸ்தான் மற்றும் கைபர் பக்துன்க்வா ஆகிய மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தில் சிக்கி தவித்து வருகின்றனர். பொது மக்களுக்கு உதவும் வகையில், பாகிஸ்தான் ராணுவம் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், நேற்று மீட்பு பணியில் பாகிஸ்தான் ராணுவ ஹெலிக்ஹொப்டர் ஒன்று ஈடுபட்டுக்கொண்டிருந்தது. அந்த ஹெலிக்ஹொப்டர் மாயமானதாக தகவல் வெளியாகி உள்ளது. அந்த ஹெலிக்ஹொப்டரில் நிவாரணப் பணிகளை மேற்பார்வை செய்து வந்த கமாண்டர் ஜெனரல் சர்ப்ராஸ் அலி உட்பட மொத்தம் ஐந்து மூத்த ராணுவ அதிகாரிகள் பயணித்தனர் என கூறப்படுகிறது. தற்போது அந்த ராணுவ அதிகாரிகளின் நிலை என்ன என்று தெரியாமல் ஹெலிக்ஹொப்டரை தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

# அல்கொய்தா அமைப்பை வழி நடத்திய அல் ஜவாஹிரி கொலை செய்யப்பட்டார்
## அதிபர் ஜோ பைடன் அறிவிப்பு



நியூயோர்க் உலக வர்த்தக மைய கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்தி உலக நாடுகளுக்கு பேரதிர்ச்சி கொடுத்த அல் கொய்தா பயங்கரவாத அமைப்பின் தலைவர் அய்மான் அல் ஜவாஹிரி கொல்லப்பட்டுவிட்டார் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

செப்டெம்பர் 11 2001ஆம் ஆண்டில் இரட்டை கோபுர தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட அல் கொய்தா பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடனை அமெரிக்க ராணுவம் பாகிஸ்தானில் சுற்றி வளைத்து சுட்டுக் கொன்றது. அதற்கு பிறகு அந்த அமைப்பின் தலைவராக செயல்பட்டு வந்த அய்மான் அல் ஜவாஹிரியை தீவிரவாதிகள் பட்டியலில் அமெரிக்கா சேர்த்தது. அவரது நடமாட்டத்தை கண்காணித்து வந்த சி.ஐ.ஏ. உளவு அமைப்பு, பல முறை அவர் மீது தாக்குதல் நடத்தி கொல்ல முயன்றது.

தற்போது ஆப்கானிஸ்தானில் தமது குடும்பத்தினருடன் ரகசியமாக வாழ்ந்து வந்த அவரை ஆளில்லா விமானம் மூலம் தாக்கி கொன்றதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார். ஜவாஹிரி குடும்பத்தினர் யாருக்கும் சேதம் ஏற்படாமல் வான்வழி தாக்குதல் வெற்றிகரமாக முடிந்ததாக அதிபர் ஜோ பைடன் கூறியுள்ளார். இது குறித்து மேலும் பேசிய அதிபர் ஜோ பைடன், 'அதிபர் புஷ், அதிபர் ஒபாமா, அதிபர் ட்ரம்ப் ஆட்சி காலத்தில் ஜவாஹிரியை அமெரிக்கா தேடி வந்தது. அவரது நடமாட்டத்தை அமெரிக்க உளவு அமைப்பு இந்த ஆண்டு தொடக்கத்தில் உறுதி செய்தது. காபூல் நகரில் அவரது குடும்பத்தினருடன் ஜவாஹிரி இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அவர் இருப்பதை உறுதி செய்த பிறகு ஜவாஹிரியை தாக்கி கொல்ல நான் அனுமதி அளித்தேன். இதில் பொதுமக்களுக்கு காயம் ஏற்படாமல் திட்டத்தை செயல்படுத்தினோம்' என்றார்.

ஒசாமா பின்லேடனுக்கு நெருங்கிய தொடர்புடைய ஜவாஹிரியை அதி முக்கிய பயங்கரவாதி பட்டியலில் இணைத்து இருந்த அமெரிக்க அரசு, கடந்த 2011ம் ஆண்டில் இருந்து தேடி வந்தது. 1993ம் ஆண்டு ஜவாஹிரி அமெரிக்காவிற்கு பயணம் மேற்கொண்டு நிதி திரட்டினார். சோவியத் ரஷ்யா நடத்திய போரில் காயம் அடைந்த ஆப்கான் நாட்டு குழந்தைகளுக்கு அவர் நிதி திரட்டினார் என கூறப்பட்டது. மருத்துவரான ஜவாஹிரி ஒசாமா பின்லேடனுக்கு மிக நெருக்கமாக இருந்தவர். 4 திருமணங்கள் செய்து கொண்ட ஜவாஹிரி உயிருக்கு அச்சுறுத்தல் இருந்ததால் அவர் தலைமறைவு வாழ்க்கை நடத்தி வந்தார்.

### பிரேஸிலில் நடந்தது அதிசயம்
## தலைகள் ஒட்டிப்பிறந்த குழந்தைகள் மூன்று வருடங்களின் பின் பிரிப்பு

பிரேஸிலில் தலைகள் ஒட்டிப்பிறந்த 3 வயதான சிறுவர்களை பலமணி நேரம் சிக்கல் மிகுந்த அறுவை சிகிச்சைகள் மூலமாக வெற்றிகரமாக பிரித்து மருத்துவர்கள் சாதனைப் படைத்திருக்கிறார்கள். பிரேஸிலில் ரியோடிஜெனிரோ நகரில் நிகழ்த்தப்பட்டிருக்கும் இந்த ஆச்சரியமூட்டும் அறுவை சிகிச்சை நவீன மருத்துவத்தின் மற்றொரு சாதனையாக பார்க்கப்படுகிறது. வடக்கு பிரேஸிலில் ஒரு கிராமத்தில் தலைகள் ஒட்டி பிறந்த இரு சிறுவர்களை பிரிக்கும் முயற்சியில் ஹெலோ நிமியிர் மூளை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இங்கிலாந்து ஜெமினி என்ற மூளை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் களம் இறங்கினர்.

ஆர்த்தர், பெர்னாண்டோ லிமா என்ற 2 சிறுவர்களையும் பிரிப்பதற்கான கடைசி இரண்டு அறுவை சிகிச்சைக்கு மட்டும் 33 மணி நேரம் பிடித்தது. அறுவை சிகிச்சை முடிந்ததும் மருத்துவர்கள் செவிலியர்கள் ஒருவரை ஒருவர் ஆரத்தழுவி ஆனந்த கண்ணீர் வடித்தனர். இந்த இரண்டு சிறுவர்களின் மூளைகளின் ஒரு பகுதி இருவருக்கும் பொதுவாக இருந்தது. இதயங்களுக்கு செல்லும் ஒரு முக்கிய நரம்பும் இருவருக்கும் பொதுவான பாதையில் இருந்தது. இதனால் பல மாதங்கள் ஆய்வு செய்த மருத்துவர்கள் மெய்நிகர் எனப்படும் விர்ச்சுவல் முறையில் பல அறுவை சிகிச்சைகளுக்கு முன்னோட்டம் நடத்தினர்.

நீண்ட முயற்சிகளுக்கு பிறகு தலைகள் பிரிக்கப்பட்ட சிறுவர்கள் 3 ஆண்டுகளுக்கு பிறகு ஒருவரது முகத்தை ஒருவர் பார்த்தனர். அடுத்த ஆறு மாதங்கள் இவர்கள் மருத்துவமனைகளிலேயே சிகிச்சை பெறுவர். 60,000 பிறப்புகளில் ஒரு பிரசவத்தில் இது போன்ற குழந்தைகள் உடல் ஒட்டி பிறக்கும் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.



# கடந்த 3 ஆண்டுகளில் 81 சீனர்களுக்கு இந்தியாவை விட்டு வெளியேற நோட்டீஸ்




இந்தியாவை விட்டு வெளியேறும்படி கடந்த 3 ஆண்டுகளில் 81 சீனர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு இன்று தெரிவித்துள்ளது.

இந்திய நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த ஜூலை 18 ஆம் திகதி தொடங்கி நடந்து வருகிறது.நாடாளுமன்ற மக்களவையில் இன்று உரையாற்றிய மத்திய உள்துறை இணையமைச்சர் நித்யானந்த ராய், 2019ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரையிலான 3 ஆண்டுகளில் இந்தியாவைவிட்டு வெளியேறும்படி, 81சீனர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டு உள்ளது என கூறினார்.

இந்த நோட்டீஸ் பெற்றவர்களின் இந்திய விசா ரத்துச் செய்யப்பட்டுவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 3 ஆண்டுகளில் மொத்தமாக 117 பேர் இந்தியாவில் இருந்து நாடு கடத்தப்பட்டுள்ளனர் என்றும், விசா நடைமுறை விதிகளை மீறியதற்காக மற்றும் பிற சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டதற்காக 726 பேர் தீங்கு விளைவிப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் அவையில் தகவல் வழங்கியுள்ளார்.




## நஷனல் ஹெரால்ட் தலைமை அலுவலகத்தில் அமுலாக்கத்துறை அதிரடி சோதனை

இந்தியாவின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேருவால் தொடங்கப்பட்ட நஷனல் ஹெரால்ட் என்ற பத்திரிகையை அசோசியேட்டட் ஜேர்னல்ஸ் நிறுவனம் நடத்தி வந்தது. அந்த நிறுவனம் நிதிப் பற்றாக்குறையில் தவித்ததால், காங்கிரஸ் கட்சி 90 கோடியே 25 லட்சத்தை வட்டியில்லாக் கடனாகக் கொடுத்தது.

அந்தக் கடனை அசோசியேட்டட் நிறுவனத்தால் திருப்பிச் செலுத்த முடியாததால், அதன் பங்குகளை காங்கிரஸ் கட்சியின் இடைக்காலத் தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோரை இயக்குநர்களாக கொண்ட யங் இந்தியா என்ற நிறுவனம் வாங்கிக்கொண்டது. இதன்மூலம் வெறும் 50 லட்சம் மூலதனத்தில் தொடங்கப்பட்ட யங் இந்தியா நிறுவனம், 90 கோடி ரூபா கடனுக்காக அசோசியேட்டட் ஜேர்னல்ஸ் நிறுவனத்தின் இரண்டாயிரம் கோடி ரூபா மதிப்புள்ள சொத்துகள், பங்குகளைப் பெற்றுக் கொண்டதாகவும் இதில் முறைகேடு இருப்பதாகவும் பா.ஜ.கவின் சுப்ரமணியசாமியால் டெல்லி உயர்நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. இதில் சட்டவிரோத பண பரிமாற்றம் நடந்துள்ளதாக எழுந்த புகாரைத் தொடர்ந்து இது குறித்து வழக்குப்பதிவு செய்து அமுலாக்கத் துறையும் விசாரணை நடத்தி வருகிறது. இந்த வழக்கில் கடந்த சில நாள்களுக்கு முன் சோனியா காந்தி மற்றும் ராகுல்காந்தியிடம் அமுலாக்கத் துறை விசாரணை நடத்தியிருந்தது.

இந்த நிலையில், டெல்லியில் உள்ள நஷனல் ஹெரால்ட் பத்திரிகையின் தலைமை அலுவலகத்தில் இன்று அமுலாக்கத்துறை அதிகாரிகள் அதிரடிச் சோதனையை நடத்தியுள்ளனர். அசோசியேட்டட் நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள முகவரியில் இயங்கி வரும் நஷனல் ஹெரால்ட் பத்திரிகையின் தலைமை அலுவலகம் மற்றும் தொடர்புடைய இடங்களில் அமுலாக்கத்துறையினர் இந்தச் சோதனையை மேற்கொண்டுள்ளனர்.

## ஆளுநருக்கு எதிராக போராட்டம் முன்னாள் அமைச்சர் கைது!



தானேயில் ஆளுநர் பகத்சிங் கோஷ்யாரிக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட வந்த தேசியவாத காங்கிரஸ் கட்சியின் முன்னாள் அமைச்சரான ஜிதேந்திர அவாத், தொண்டர்களுடன் கைது செய்யப்பட்டார்.

குஜராத்திகள், ராஜஸ்தானியர்களை வெளியேற்றினால் உங்களிடம் பணம் இருக்காது, மும்பை நிதித் தலைநகராக இருக்காது என மகாராஷ்டிரா ஆளுநர் பகத்சிங் கோஷ்யாரி கடந்த சில நாள்களுக்கு முன் பேசியிருந்தார். ஆளுநரின் பேச்சுக்கு மாநில அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து இருந்தனர். அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

ஆளுநருக்கு எதிராக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிவசேனா, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், இன்று தேசியவாத காங்கிரஸைச் சேர்ந்த முன்னாள் மந்திரி ஜிதேந்திர அவாத் எம்.எல்.ஏ. தலைமையில் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் மும்பை ராஜ் பவனை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த வந்தனர். அவர்களை தானே கோப்ரி பகுதியில் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதனால் பொலிஸாருக்கும், தொண்டர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதையடுத்து பொலிஸார் ஜிதேந்திர அவாத் மற்றும் கட்சியினரை கைது செய்து அழைத்துச் சென்றனர்.

ஆளுநர் தொடர்ந்து அவதூறாகப் பேசி வருகிறார். இது தீவிரமானது. அவர் எங்களை பிச்சைக்காரர்கள் என நினைக்கிறார். கட்சிகள் அரசியலைத் தாண்டி ஆளுநருக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும், என்று ஜிதேந்திர அவாத் வலியுறுத்தியிருக்கிறார்.

## நந்தம்பாக்கத்தில் புத்தொழில் நிறுவன கண்காட்சி முதலமைச்சர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்




சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் காப்பகங்களின் கண்காட்சிக் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கண்காட்சியை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று தொடங்கி வைத்தார்.

இந்த கண்காட்சியில் மருத்துவம் சம்பந்தப்பட்ட பல்வேறு நிறுவனங்களின் அரங்குகளும் இடம்பெற்றிருந்தன. நீரிழிவு நோய், இரத்தக் கொதிப்பு மட்டுமன்றி பெண்களின் உடல் சார்ந்த பல்வேறு நோய்களைக் கண்டறிய நவீன முறையிலான மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ளும் உபகரணங்களும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

மனித சிறுநீரில் இருந்து உரம் தயாரிப்பது, மக்காத குப்பையில் இருந்து எண்ணை தயாரிப்பது உள்பட புதுப்புதுக் கண்டுபிடிப்புகளும் அங்கு காணப்பட்டன. இந்த அரங்குகள் ஒவ்வொன்றையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார். அவருக்கு அங்கிருந்த பிரதிநிதிகள் விளக்கம் அளித்தனர். அப்போது அவருடன் தமிழக குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடனிருந்தனர். அதன் பிறகு நடைபெற்ற கருத்தரங்கு நிகழ்ச்சிக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை தாங்கினார். இதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரையாற்றினார். இதில் அரசுத் துறை உயர் அதிகாரிகளும் பங்கேற்றனர். இந்த கருத்தரங்கில் நெல்லை, மதுரை மாவட்டங்களில் இருந்தும் காணொலி வாயிலாக பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

## திரைப்படத் தயாரிப்பாளர் கலைப்புலி தானு அலுவலகத்தில் வருமானவரித்துறை சோதனை



தமிழ்த் திரைத்துறையில் முன்னணித் தயாரிப்பாளரான கலைப்புலி எஸ்.தாணுவின் சினிமா தயாரிப்பு நிறுவனத்தின் அலுவலகம் சென்னை தி.நகரில் உள்ளது. அங்கு இன்று வருமானவரித்துறையினர் சோதனை நடத்தியுள்ளனர்.

சினிமா நிதி வழங்குநரான அன்புச்செழியனின் வீடு உள்பட அவருக்கு தொடர்புடைய சென்னை, மதுரையில் உள்ள 40 இடங்களில் இன்று அதிகாலை முதல் வருமானவரித் துறையினர் சோதனை நடத்திய நிலையில், அடுத்து சினிமா தயாரிப்பாளர் கலைப்புலி தாணு அலுவலகத்திலும் சோதனை நடைபெற்றுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மக்கள் போராட்ட அமைப்பின் ஆவணங்கள் திருமலை நிலையம் உடைத்து சூறையாடல்!



## அச்சுறுத்தல் நடவடிக்கை எனக் கருத்து

திருகோணமலை உவர்மலையில் இயங்கி வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான அகம் மனிதாபிமான வள நிலையத்தின் உள்ள ஆவணங்கள் மற்றும் சி.சி.ரி.வி. கமரா சேவர் ஆகியன திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளரும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளருமான கண்டுமணி லவகுகராசா ஊடகங்களுக்கு பின்வருமாறு கருத்து தெரிவித்தார்:–

கடந்த 30 ஆம் திகதி அலுவலகத்தை வார விடுமுறைக்காக மூடி அதன் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் அலுவலகத்தை திறந்த போது அங்கே எனது அறை கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த ஆவணங்கள் சிதைக்கப்பட்டிருந்தன. அதே போல இன்னுமொரு அறையும் உடைக்கப்பட்டிருந்தது. லொக்கரும் உடைக்கப்பட்டிருந்தது. சி.சி.ரி.வி. கமரா சேவர் திருடப்பட்டிருந்தது.

இது திருடர்களால் நடாத்தப்பட்டதாக நான் நினைக்கவில்லை. காரணம் அலுவலகத்தில் மக்களுக்கு வழங்குவதற்கான அரிசி மற்றும் ஏனைய நிவாரணப் பொருள்கள் இருந்தன.

அதுபோல பெறுமதியான மடிக்கணனி, கமரா, கணனித் தொகுதி போன்ற பொருள்கள் இருக்கத்தக்கதாக ஆவணங்களை மாத்திரம் திருடி இருக்கிறார்கள். இது சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

எமது நிறுவனமானது உரிமை சார்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜனநாயக ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் போராடுகின்ற அமைப்பு. அது மாத்திரம் இல்லாமல் நான் 15 அமைப்புக்கள் கூட்டணியாக இருக்கின்ற வடக்கு கிழக்கு அபிவிருத்திக்குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும் இருந்து வருகின்றேன். இப்போது 100 நாள் வேலைத்திட்டமான 'செயல் முனைவுப் போராட்டம்' ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு இருந்தோம். வடக்கு, கிழக்கில் உள்ள மக்களுக்கு கௌரவமான, நீதியுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என்ற கோஷமும் இந்த வேலைத்திட்டத்தில் முன்வைத்துள்ளோம். எனவே இதற்கான அச்சுறுத்தலாக இந்நடவடிக்கை இருக்கலாம் என நாங்கள் சந்தேகிக்கின்றோம். – என கண்டுமணி லவகுகராசா கருத்து தெரிவித்தார்.





# பனங்காடு பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திப்பணி அங்குரார்ப்பணம்

(நூருல் ஹூதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் பி.எஸ்.எஸ்.பி. செயற்றிட்டத்தின் கீழ் தெரிவான அக்கரைப்பற்று – பனங்காடு பிரதேச வைத்தியசாலையில் அபிவிருத்திப்பணிகளை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் எம்.பி. அப்துல் வாஜித், பணிமனை திட்டமிடல் வைத்திய அதிகாரி எம்.சீ.எம்.மாஹிர், பனங்காடு பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி, வைத்தியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், பனங்காடு பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர், முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# அம்பாறையில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்த தலைவரை எங்கே காணோம்?

## காரைதீவில் கலையரசன் எம்.பி. கேள்வி

( காரைதீவு நிருபர் சகா)

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் இளைஞர்களை உசுப்பேத்தி தமிழர் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்த தலைவர்கள் எங்கே? நாட்டிலா? வெளிநாட்டிலா? விலாசமே தெரியாமல் இருக்கின்றார். இவர்களை இன்னும் நம்புவதா?

-இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கேள்வி எழுப்பினார்.

'பொருளாதார நெருக்கடியும் சமகால அரசியலும்' எனும் கருப்பொருளில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் மக்களைத் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல்கள் வடகிழக்கு உட்பட பல இடங்களில் இடம்பெற்று வருகின்றன.

அதனடிப்படையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காரைதீவு விபுலானந்த கலாச்சார மண்டபத்தில் காரைதீவு



பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

நாட்டில் தற்போது அரசியல் ரீதியான குழப்பங்கள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. அண்மையில் ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் தெரிவாகி இருந்தார். எங்கள் மக்களின் கருத்துக்களையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். நல்லாட்சி அரசுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முட்டுகொடுத்தது. எதை சாதித்தது? நல்லாட்சியின் கதாநாயகர்கள் யார் என்பதை மக்கள் அறிவார்கள். இந்த நாட்டில் மூன்று இனங்கள் வாழ்கின்றனர். எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஜனநாயகத்தின் பால் தமிழ் தேசிய கூட்டமைப்பானது பயணித்து கொண்டிருக் கின்றது.- என்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இராசமாணிக்கம் சாணக்கியன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றி, சமகால அரசியல் போக்கு, ஜனாதிபதி தெரிவில் கூட்டமைப்பின் வாக்களிப்புத் தீர்மானம் பற்றிய தெளிவுபடுத்தல்களை வழங்கினர்.

# கிழக்கு சமூக சேவைகள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் பொறுப்பேற்பு

(பைல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் புதிய மாகாணப் பணிப்பாளராக ஏ.ஜீ.தெய்வேந்திரன் நேற்றுக் காலை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றி வந்த என்.மதிவண்ணன் மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளராக கடந்த 31 ஆம் திகதி கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் நியமிக்கப்பட்டமையை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு இலங்கை நிருவாக சேவை தரம் – II யைச் சேர்ந்த ஏ.ஜீ.தெய்வேந்திரன் நியமிக்கப்பட்டார். இவர், கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் உதவிச் செயலாளராக கடமையாற்றி வந்த நிலையிலேயே இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சமூக நலன்புரிச் சேவைகள், கிராமிய மின்சார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முதளிதரன், உதவிப் பணிப்பாளர் திருமதி எஸ்.சரண்யா, நிருவாக உத்தியோகத்தர் எ.சுவேந்தர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# நிலக்சன் உள்ளிட்ட கொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டும்!

## யாழ்.ஊடக அமையம் வலியுறுத்து

யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கை மாணவனும் ஊடகவியலாளருமான சகாதேவன் நிலக்சன் ஆயுததாரிகளால் சுட்டுப்படுகொலைசெய்யப்பட்டு நேற்று (திங்கட்கிழமை) 15 ஆவது ஆண்டு நினைவுநாள் ஆகும். நிலக்சன் உள்ளிட்ட படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

– இவ்வாறு யாழ். ஊடக அமையம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு –

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலைய மாணவனும் சாளரம் சஞ்சிகையின் ஆசிரியரும் தமிழ் மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவருமான ஊடகவியலாளர் சகதேவன் நிலக்சன் 2007 ஆம் ஆண்டின் இதே நாளன்று அதிகாலை 5 மணியளவில் கொக்குவிலில் உள்ள அவற்து வீட்டில் பெற்றோரின் முன்னிலையில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் படுகொலை செய் யப்பட்டிருந்தார்.

நிலக்சன் படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் 15 வருடங்கள் கடந்து சென்றுவிட்டன. எனினும் இன்றுவரை நிலக்சனும் நிலக்சன் போல சுட்டுக் கொல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் போன ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்களுக்கான நீதி விசாரணைப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவில்லை.

கடந்த 2016 ஆம் ஆண்டு வடக்கு-கிழக்கு ஊடகவியலாளர்கள் ஸ்ரீலங்கா நாடாளுமன்றில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அப்போதைய பிரதமரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க மற்றும் அப்போதைய ஊடக அமைச்சர் உள்ளிட்டவர்களைச் சந்தித்து படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்களுக்கான நீதி விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறு கூட்டாக கோரிக்கை விடுத்தனர்.

எனினும் ஊடகவியலாளர்களது கோரிக்கைக் கடிதத்தை அன்றைய பிரதமரும் இன்றைய ஜனாதிபதியுமாகிய ரணில் விக்கிரமசிங்க இறுகிய முகங்களோடு வாங்கிய நிகழ்வை எவரும் மறந்திருக்க வாய்ப்பில்லை.

பின்னராகவும்யாழ்ப்பாணத்தில் வடக்கு ஊடகவியலாளர்களை சந்திக்கையில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க போதிய விசாரணையாளர்களில்லாதிருக்கின்றனர் என விளக்கமளித்துமிருந்தார்.

எனினும் இத்தனை ஆண்டுகள் கடந்த நிலையிலும் அடையாளத்துக்கேனும் ஒரு தமிழ் ஊடகவியலாளரது படுகொலை தொடர்பிலும் எந்தவொரு விசாரணையும் ஆரம்பிக்கவில்லைஎன்பதுதான்கசப்பான உண்மை. ஓர் ஊடகவியலாளரின் படுகொலைக்கான நீதி விசாரணைக்கே முன்வராத அரசைத் தான் தமிழ்த் தேசியம் பேசுகின்ற அரசியல் தலைமைகள் நல்லாட்சி என பாதுகாத்தார்கள். தற்போது சர்வகட்சி அரசு என பாதுகாப்பு அரணமைக்கக் காத்துக்கிடக்கிறார்கள். அந்த அரசிடம்தான் லட்சக்கணக்கில் கொல்லப்பட்ட மக்களுக்கான நீதியையும் காணாமல் ஆக்கப்பட்ட மக்களுக்கான நீதிவிசாரணையையும்அவர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

நிலக்சன் கொல்லப்பட்டு நேற்றோடு பதினைந்து வருடங்கள் ஓடிவிட்டன. ஆனால் இந்த விடயங்களில் தென்னிலங்கை ஊடக அமைப்புக்களும் சர்வதேச ஊடகம் சார் மற்றும் சாராத அமைப்புக்களும் ஊடகவிலாளர்களின் மரணத்தின் போது கண்டனம் தெரிவிப்பதென்பதை தாண்டி எதனையும் செய்து முடிக்கமுடியாமாலேயிருக்கின்றன.

தங்கள் உயிர்களைத் துச்சமாக்கி மரணித்துப்போன ஊடகர்களின் குடும்பங்கள் என்ன செய்கின்றன. அவர்களது எதிர்காலம் அவர்களுக்கான நீதி போன்ற விடயங்களில் மௌனித்துப் போனவர்களாகவே அவர்கள் இருக்கின்றனர். நிலா ஆயுதம் ஏந்திய போராளி அல்ல. அவர் பேனா தூக்கி எழுத்துக்களால் சாதிக்கத் துடித்த ஒரு பேனாப்போராளி. ஊடகத்துறையில் சாதிக்க களம்புகுந்து படுகொலை செய்யப்பட்டவர்களில் நிலக்சனும் ஒருவர். இலங்கையின் கறை படிந்த ஊடக ஜனநாயகத்தின் பக்கங்களில் நிலாவின் மரணமும் ஒரு சகாப்தம்.

'தூயவை துணிந்தபின் பழி வந்து சேர்வதில்லை'– நிலக்சன் அடிக்கடி கூறிக்கொள்ளும்வாசகத்தை அவனது 15 ஆவது ஆண்டு நினைவு நாளில் யாழ்.ஊடக அமையம் மீண்டுமொரு முறை நினைவுகூரு கின்றது. – என்றுள்ளது.

# கோட்டாவை கைது செய்!

## கனேடிய எம்.பி. வலியுறுத்து

சிங்கப்பூரில் தங்கியிருக்கும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கைதுசெய்யப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கும் கனேடிய பழைமைவாதக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பியேர் பொய்லியேவ்ர், சமாதானம் நிலவும் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இப்போது உலகிலேயே மோதல் இல்லாத – மிகையான இராணுவமயமாக்கலைக்கொண்ட பிராந்தியங்களில் ஒன்றாகக் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியிருக்கின்றார். இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைக் கைதுசெய்யுமாறு வலியுறுத்தி சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தால் சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் குற்றவியல் முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள பின்னணியில், 'போர்க்குற்றவாளிகள் பொறுப்புக் கூறச்செய்யப்படவேண்டும்' என்று வலியுறுத்தி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே கனேடிய பழைமைவாதக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பியேர் பொய்லியேவ்ர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி தற்போது சிங்கப்பூரில் இருக்கின்ற பின்னணியில் அவரைக் கைதுசெய்ய வேண்டுமென வலியுறுத்திவரும் இலங்கை மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களின் கோரிக்கையுடன் நானும் இணைகின்றேன். அதுமாத்திரமன்றி இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச தீர்ப்பாயத்தின் ஊடாக நீதியைப் பெற்றுக்கொள்வதை முன்னிறுத்தி கனேடிய அரசாங்கம் முழுமையான அழுத்தத்தைப் பிர யோகிப்பதை உறுதிசெய்வேன் என்று அவர் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார். அத்தோடு மனித உரிமைகள் செயற்பாட்டா ளர்களுடன் ஒருமித்துநின்று, போர்க்குற்ற விசாரணை தொடர்பான அவர்களது கோரிக்கைக்கு ஆதரவளித்து, 'மெக்னிற்ஸ்கி' சட்டத்தின் பிரகாரம் குற்றவாளிகளுக்கு எதிராகத் தடைகளை விதிப்பதற்கு ஏற்றவாறான கனேடிய தலைமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்குத் தயாராக இருக்கிறேன் எனவும் அவர் வாக்குறுதியளித்துள்ளார்.

'தமிழ்மக்கள் மீதான இனவழிப்பை அடுத்து நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக நாம் நீண்டகாலமாக செயற்பட்டு வந்திருக்கின்றோம்' என்று சுட்டிக்காட்டியுள்ள பியேர் பொய்லியேவ்ர், 'போரால் கணவனை இழந்த பெண்களுக்கான இழப்பீட்டை வழங்குமாறும், நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவமயமாக்கலை இல்லாதொழிக்குமாறும் நாம் ஒரு தசாப்தகாலத்துக்கும் மேலாக வலியுறுத்திவருகின்றோம்' என்றும் தெரிவித்துள்ளார்.

'டொரன்டோ நகரின் வீதிகளில் 5 மீற்றர் இடைவெளியில் இராணுவ வீரர்கள் நிற்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் சமாதானம் நிலவும் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இப்போது உலகிலேயே மோதல் இல்லாத – மிகையான இராணுவமயமாக்கலைக்கொண்ட பிராந்தியங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. சிறுபான்மையினத் தமிழ்மக்களை ஒடுக்குவதும் தனியார் சொத்துக்களைக் கையகப்படுத்தி ஆட்சியாளர்களின் அதிகாரத்தை வெளிக்காட்டுவதுமே இதன் பிரதான நோக்கங்களாகும்' என்று கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் பியேர் பொய்லியேவ்ர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வகட்சி அரசில் சிறுபான்மையினத்தவர் ஒருவருக்கு பிரதமர் பதவி வழங்கி முன்னுரிமையாகச் செயற்படுக!

## நளின் பண்டார பரிந்துரை



நாட்டை இந்தளவிற்கு நெருக்கடிக்கு உள்ளாக்கிய அஜித் நிவாட் கப்ரால் , பி.பி.ஜயசுந்தர உள்ளிட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, குறுகிய காலத்துக்காக அமைக்கப்படும் சர்வகட்சி அரசாங்கத்தில் சிறுபான்மையினப் பிரதிநிதியொருவரை அதன் பிரதமராக நியமிக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது உளவியல் ரீதியான யுத்தத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்.

ஆர்ப்பாட்டங்களால் ஜனாதிபதியாகத் தெரிவான அவர் தற்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களையே அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றார்.

போராட்டங்களில் ஈடுபட்டவர்களை தண்டிப்பது ஜனாதிபதியினதும் அவரது அரசாங்கத்தினதும் கடமையல்ல. மாறாக, ஆர்ப்பாட்டங்களில் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதே அவர்களின் பொறுப்பாகும்.

இன்று நாட்டில் சட்டமும் அமைதியும் இருக்கின்றனவா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களாக பகிரங்கமாக மனிதப் படுகொலைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

மீண்டுமொரு உப கலாசாரமொன்று உருவாகிக் கொண்டிருக்கின்றதா? இவை அரசாங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றனவா? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பில் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை. எமது நாட்டை சர்வதேசம் அங்கீகரிக்கவில்லை.

கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தலின் போது வழங்கப்பட்ட மக்கள் ஆணை இன்று முற்றாக மாற்றமடைந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சிக்கும், பொதுஜன பெரமுனவிற்கும் 5 சதவீதத்துக்கும் குறைவான ஆதரவாளர்களே உள்ளனர்.

எனவே நாட்டை ஏமாற்றும் சர்வகட்சி அரசாங்கத்தில் நாம் ஒருபோதும் பங்கேற்கப் போவதில்லை. எனவே நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்காக எம்முடன் இணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம். இனவாதத்தை தூண்டி மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தி ஆட்சியைக் கைபற்றிய கோட்டாபய ராஜபக்ஷவும் அரசாங்கமும் இரு வருடங்களிலேயே பதவி துறக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இவர்களது ஆட்சியில் மக்களின் கனவுகள் சிதறடிக்கப்பட்டுள்ளன. இன்று பெற்றோல் மற்றும் எரிவாயு உள்ளிட்டவற்றைப் பெற்றுக் கொள்வதே மக்களின் கனவாகவுள்ளது.

நாட்டை இந்த நிலைமைக்கு உள்ளாக்கிய அஜித் நிவாட் கப்ரால் , பி.பி.ஜயசுந்திதர உள்ளிட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு வலியுறுத்துகின்றோம்.

அதனை விடுத்து தற்போதுள்ள அரசாங்கமும், நாடாளுமன்றமும் இன்னும் இரண்டரை ஆண்டுகளுக்கு பதவி வகிக்கும் எனில் அதனை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

விரைவில் பொதுத் தேர்தலுக்குச் செல்லக் கூடியவாறு குறுகிய காலத்துக்கு சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பதாகக் கூறினால், அது தொடர்பில் அவதானம் செலுத்த முடியும்.

அந்த அரசாங்கத்தில் சிறுபான்மை இனத்தவர் ஒருவரை பிரதமராக நியமித்து ஒரு முன்னுதாரணமாக செயற்பட முடியும். அதனை விடுத்து கால வரையறையற்ற சர்வகட்சி அரசாங்கத்தில் எம்மால் இணைய முடியாது. – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.08.20 22இல் வெளியிடப்பெற்றது.